# ★ பூநகரித் தோல்வி பற்றி கருத்துக் கூற


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 7 இதழ் 278
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 22-11-1993



மாநகராட்சி மன்ற 22-11-1993


## இராணுவம் மறுப்பு

(கொழும்பு)

பூநகரி தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட மிகப் பெரும் இழப்பு குறித்து கருத்து கூற இராணுவ தரப்பு மறுத்து விட்டதாக பி.பி.ஸி. நிருபர் கப்பலு ஜசராக் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் பி. பி. ஸி. க்கு கூறுகையில்; இவ் வருடத்தில் ஏற்பட்ட மிகப் பெரும் இராணுவ இழப்பு பூநகரி தாக்குதலாகும். இது படையினருக்கு வெற்றியைத் தராத ஒரு போராகும் இதற்கு முன்பு புலிகள் இராணுவ முன்னணி காவலரங்க

(2-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் தீவிர பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் திட்டங்களை முறியடிக்கும் வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பல சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும்

(2-ம் பக்கம் பார்க்க)

### ● பல மாதங்களின் பின்

# கிழக்கில் பல தாக்குதல்கள்

# 5 படையினர் பலி; ஐவர் காயம்

## பல ஆயுதங்களும் மீட்பு

(திருமலை)

கிழக்கில் திருமலையிலும் மட்டக்களப்பிலும் விடுதலைப் புலிகள் நேற்று மேற்கொண்ட மூன்று வெவ்வேறு தாக்குதல்களில் 5 படையினர் உயிரிழந்ததுடன் ஐவர் படுகாயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் மீட்கப்பட்டது.

திருமலை பன்குளம் விமானப்படை முகாமிலிருந்து வீதி ரோந்து செய்ய முயன்ற 5 பேர் கொண்ட விமானப்படையினர் மீது புலிகள் நேற்று மேற்கொண்ட கனவேக அதிரடித் தாக்குதலில், இரண்டு விமானப் படையினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். விமானப்படை முகாமிலிருந்து 300 மீற்றர் தொலைவில் விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் ரி-81 ரக துப்பாக்கி - 02, ஜே. ஆர் ரகக்கைக்குண்டு - 04, ரவைகள் - 320, மழைக்கவசம் 07, ஏ.கே. கோல்சர் -02, தண்ணீர்கான் - 01 தலைக்கவசம் - 01 ஆகிய ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை திருமலை

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாம்கள் உஷார் நிலையில்!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இவ்வாரம் புலிகள், இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் எதனையும் தொடுக்கலாமென எதிர்பார்க்கப்படுவதாக இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன

(4-ம் பக்கம் பார்க்க)

## உண்மைச் செய்திகளை அரசு மறைக்கிறது

(கொழும்பு)

'ராவய' பத்திரிகையின் நிருபர்கள் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு சென்று, வடக்கு கிழக்கு யுத்தத்தின் உண்மையான தகவல்களை தென்இலங்கை மக்களுக்கு தெரிவித்துள்ளனர் என்று கொழும்பில் இருந்து ஒரு சிங்கள நேயர்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு வாக்களிக்குமாறு இராணுவம் கிழக்கில் மிரட்டல்

(மட்டக்களப்பு)

கிழக்கில் அடுத்த ஆண்டு முற்பகுதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடாத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சியை படையினர் நடைமுறைப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் கிழக்கின் பல பகுதியிலும் கிராமம் கிராமமாக சென்று தமிழ் மக்களை மிரட்டி நடைபெறப் போகும் தேர்தலில் பங்கு பற்றி ஐ. தே. கவின்

(4-ம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி கடன் மீளல் நாளை முதல் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு பின்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கீழ்வரும் நாட்களில் வழங்கப்படவுள்ளது.

நல்லூர், யாழ்ப்பாணம், காரைநகர், வேலணை நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 1-45 மணிக்கு யாழ் நாவலர் கலாச்சார மண்டபத்தில், கோப்பாய் - பி. ப 4-45 மணிக்கு நீர்வேலி ப.நோ.கூ. சங்க கட்டடத்தில்

(2-ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணியுடன் நீக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு அறிவித்தது. (சி)

## மாவீரர் வாரம் எழுச்சியுடன் தமிழீழம் எங்கும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் வாரம் நேற்று தமிழ் பிரதேசமெங்கணும் உணர்வுடனும், எழுச்சியுடனும் ஆரம்பமானது.

நேற்றுக்காலை 9-00மணியளவில் தமிழீழத்திலுள்ள சகல அரச அலுவலகங்கள் தனியார் நிறுவனங்கள் சன சமூக நிலையங்கள், பாடசாலைகள் பொதுஸ்தாபனங்கள்போன்ற இடங்களில் கொடியேற்றப் பாடல் இசைக்கப்பட தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டதுடன் கொடிவணக்கமும், மாவீரர் அஞ்சலியும் இடம்பெற்றது.

இம்மாதம் 27ம் திகதிவரை

(4ம்பக்கம் பார்க்க)

## மன்னார் பகுதியில் புக்காரா தாக்கு

(மன்னார்)

மன்னார் பரப்புக் கடந்தான் பகுதியில் நேற்றுக்காலை 8-45 மணியளவில் புக்காரா விமானம் ஒன்று பலத்த குண்டுத் தாக்குதலை நடாத்தியது.

இதேவேளையில் மாங்குளம்

(4-ம் பக்கம் பார்க்க)

## 1995ம் ஆண்டு மார்ச்சில் பொதுத் தேர்தல்

(கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தல் 95ம் ஆண்டு மார்ச் மாதமே நடைபெறும். ஜனாதிபதி தேர்தல் 94ம் ஆண்டு டிசம்பரில் நடைபெறும் என ஜனாதிபதி விஜயதுங்க ஐ.தே.க. வருடாந்த மாநாட்டில் கூறியுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக ஐ. தே. கவின் பொதுக்குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. விஜயதுங்க தற்போது தனது பிரசார நடவடிக்கையை ஆரம்பித்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எதிர்கட்சி ஜனாதிபதி வேட்பாளரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்கட்சி பூசலினால் நலிவடைந்து போயிருப்பதாகவும் கூறப்படுகிறது. (வி)

## இந்தியா கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவேண்டும்

(சென்னை)

கச்சதீவு தொடர்பான ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறி வருவதால் அதனை இந்திய அரசு ரத்துச்செய்ய வேண்டும் என அகில இந்திய பார்வட் பிளாக் கட்சிப் பொதுச் செயலர் திரு. சித்தபாசு கோரிக்கை விடுத்துள்ளார்.

கச்சதீவு பகுதியில் இந்திய மீனவர்கள் தங்கள் மீன்பிடி வலைகளை உலரவைப்பதற்கு கூட இலங்கை அரசு அனுமதிப்பதில்லை எனவும் குறை

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். வீ. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (இ- 602)

### விற்பனைக்கு

மிகத் தரமானதும் சிறந்ததுமான C 90 H A 2 ஹொண்டா மோட்டார் சைக்கிள், மூன்று சுருதியுடைய இந்திய சுருதிப் பெட்டி, கால் பெட்டி பெரிய ஆர்மோனியம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. சிவசண்முகமூர்த்தி ஆசிரியர், தொல்புரம், சுழிபுரம். (இ-605)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## திருப்பலி வழிபாடுகள்

(அரியாலை)

யாழ். குருநகர் புனித யாகப்பர் தேவாலயம் சுப்ப சொனிக் தாக்குதலில் சேதமடைந்ததையடுத்து திருப்பலி ஆராதனை முதலிய வழிபாடுகள் குருநகர் பாங்சால் வீதியிலுள்ள புனித. புதுமை மாதா ஆலயத்தில் நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது. -59

## குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெற்செய்கைக்கான நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கும் நோக்குடன் சிறு குளங்களைச் சிரமதான அடிப்படையில் புனரமைக்கும் பணியை முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கிராமிய உற்பத்திக் குழுக்களுடனும், மக்களுடனும் இணைந்து மேற்கொண்டது.

நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவுப் பிரதேசங்களிலே இதுவரை சுமார் பன்னிரண்டு சிறுகுளங்கள் சிரமதான அடிப்படையில் புனரமைக்கப்படுகின்றன.

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு

**சங்கானை**
யா/ச

| | | | |
|---|---|---|---|
| 129 | 182 | 773 | 1163 |
| 2068 | 2338 | 2535 | 2607 |
| 4571 | 237 | 299 | 429 |
| 478 | 591 | 593 | 871 |
| 4361 | 4426 | 143 | 156 |
| 339 | 940 | 975 | 1096 |
| 1585 | 1981 | 4664 | 84 |
| 264 | 295 | 300 | 402 |
| 793 | 927 | 3051 | 4023 |
| 39 | 83 | 105 | 180 |
| 277 | 330 | 363 | 368 |
| 3431 | | | |
| 179 | 223 | 261 | 288 |
| 454 | 526 | 1596 | 3628 |
| 4288 | 216 | 410 | 761 |
| 1138 | 1203 | 1636 | 2868 |
| 3834 | 3904 | 124 | 455 |
| 459 | | | |
| 671 | 732 | 1316 | 3361 |
| 3741 | 4289 | 482 | 580 |
| 1201 | | | |
| 1730 | 2200 | 2587 | 3031 |
| 3900 | 498 | 988 | 1302 |
| 1485 | 2355 | 3101 | 3409 |
| 4013 | 122 | 259 | 497 |
| 855 | 981 | 1330 | 2354 |
| 3608 | 4033 | | |

**காரைநகர்**
யா/கா

| | | | |
|---|---|---|---|
| 91 | 370 | 347 | 854 |
| 174 | 969 | 154 | 802 |
| 279 | 484 | 307 | 867 |
| 26 | 158 | 401 | 904 |
| 253 | 656 | 45 | 312 |
| 214 | 871 | | |

**வேலணை**
யா/வே

| | | | |
|---|---|---|---|
| 15 | 65 | 420 | 824 |
| 2802 | 268 | 382 | 1213 |
| 1449 | 1481 | 2345 | 07 |
| 328 | 701 | 1347 | 2421 |
| 2626 | 241 | 592 | 641 |
| 688 | 1863 | 2403 | 50 |
| 378 | 633 | 754 | 780 |
| 2471 | 212 | 774 | 1100 |
| 1275 | 2084 | 2667 | 06 |
| 351 | 359 | 1401 | 1521 |
| 2495 | 112 | 162 | 219 |
| 280 | 430 | 805 | 19 |
| 210 | 368 | 386 | 582 |
| 2266 | 122 | 190 | 232 |
| 526 | 1103 | 1417 | 577 |
| 640 | 1210 | 1355 | 1418 |

**கரவெட்டி**
யா/க

| | | | |
|---|---|---|---|
| 216 | 244 | 289 | 903 |
| 1027 | 2303 | 2385 | 3414 |
| 4185 | 4764 | 202 | 389 |
| 507 | 586 | 1627 | 1920 |
| 2049 | 3168 | 3428 | 3912 |
| 147 | 321 | 335 | 936 |
| 1295 | 1663 | 1745 | 2379 |
| 3640 | 4828 | 10 | 175 |
| 347 | 608 | | |
| 791 | 1109 | 1464 | 1470 |
| 2652 | 3181 | 69 | 183 |
| 416 | 804 | 958 | 1575 |
| 2464 | 3531 | 3704 | 4637 |
| 161 | 234 | 418 | 728 |
| 815 | 1002 | 1360 | 1836 |
| 3049 | 3616 | 148 | 453 |
| 573 | 765 | 902 | 2246 |
| 3803 | 3817 | 4347 | 4353 |
| 94 | 309 | 521 | 803 |
| 994 | 1024 | 1129 | 2111 |
| 3810 | 4307 | 606 | 685 |
| 826 | 937 | 1035 | 2672 |
| 3341 | 4280 | 4543 | 4613 |
| 11 | 441 | 466 | 934 |
| 1203 | 2149 | 2944 | 3409 |
| 4394 | 4656 | 87 | 88 |
| 97 | 315 | 327 | 1685 |
| 2412 | 2516 | 3084 | 3130 |

**பருத்தித்துறை**
யா/பரு

| | | | |
|---|---|---|---|
| 957 | 1403 | 2163 | 2165 |
| 2460 | 2826 | 4252 | 4344 |
| 16 | 153 | 260 | 319 |
| 419 | 2614 | 3356 | 3922 |
| 11 | 26 | 42 | 340 |
| 820 | 2530 | 2837 | 4021 |
| 110 | 320 | 801 | 909 |
| 2463 | 2603 | 4142 | 4283 |
| 278 | 451 | 458 | 546 |
| 864 | 2934 | 3161 | 3436 |
| 172 | 239 | 1803 | 2010 |
| 2461 | 2873 | 2904 | 4286 |
| 412 | 550 | 665 | 763 |
| 790 | 874 | 877 | 1327 |
| 87 | 304 | 643 | 961 |
| 1512 | 2340 | 2502 | 4241 |
| 04 | 36 | 678 | 738 |
| 837 | 930 | 1920 | 2594 |
| 259 | 1236 | 1561 | 2050 |
| 2675 | 3073 | 3138 | 3878 |
| 571 | 673 | 791 | 1026 |
| 2148 | 3146 | 3253 | 3726 |

(தொடரும்)

## இராசிபலன்

22 - 11 - 1993

திங்கட்கிழமை

( தமிழுக்கு கார்த்திகை 7 )

நவமி பி. இ. 1-29 வரை; சதயம் பி. ப 4-34 வரை. இன்று நாள் இராகுகாலம் காலை 7-40 முதல் 9-10 வரை. சுப நேரம் நண்பகல் 12-10 முதல் 1-40 வரை.

மேடம்- அறிஞர் உதவி, தொழில் மேன்மை, இனசன வருகை.

இடபம்- மனைவில் சுப நிகழ்வு, விருந்துபசாரம், மன மகிழ்ச்சி.

மிதுனம்- தொழில் குறைவு, பணிவான் தொல்லை, அகால உணவு.

கடகம்- அடிபணிதல், குடும்ப மனஸ்தாபம், குறை கேட்டல்.

சிங்கம்- வருவாய் மேம்படல், பழைய உறவு, நல்ல வாய்ப்பு.

கன்னி- போட்டியில் ஜெயித்தல், உற்சாகம், நல்லோர் சகாயம்.

துலாம்- மனத்துயர், மனைவி சஞ்சலம், தனிமைப்படல்.

விருச்சிகம்- கண்ணில் நோய், அமைதிக் குறைவு, அலைச்சல்.

தனுசு- தொழில் சிறப்பு, உறவினர் பாராட்டு, குடும்ப சுகம்.

மகரம்- ஏமாற்றம், குடும்ப பிரிவு, ஆணவப்பேச்சு.

கும்பம்- காரிய சித்தி, அன்னியர் உதவி, புதிய முதலீடு.

மீனம்- கெட்டகனவு, வீண் மனஸ்தாபம், வைத்திய செலவு.

—ஜோஸ்யர்.

## பூநகரி முகாம் மீதானது மோசமான தாக்குதல்

கொழும்பு

தனது இராணுவ சேவையில் பூநகரியில் இடம்பெற்றது போன்ற படுமோசமான தாக்குதல் எதனையும் சந்திக்கவில்லை என கேணல் ரஞ்சித் சில்வா என்ற இராணுவ அதிகாரி ரூபவாஹினிக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: புலிகளின் இந்த மோசமான தாக்குதல் 11-ம் திகதி அதிகாலை 1-10க்கு ஆரம்பமானது எதிர்பாராத எண்ணிக்கை கொண்ட புலிகள் இத்திடீர் தாக்குதலை நடாத்தினார்கள். ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட புலிகள் தாக்கியிருக்கலாம்.

தற்போது இப்பகுதி ஓரளவு வழமை நிலைக்கு திரும்பி வருகிறது என்றும் கூறினார். (ம-இ)

## இராணுவ ரீதியில் தீர்வு தேவையாம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை அரசாங்க அமைச்சர்கள் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி வருகின்றனர்.

இனப்பிரச்சினை என்று இலங்கையில் எதுவுமில்லை, இங்கு இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை என்று ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க கூறிய கூற்றை கைத்தொழில் விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சர் விமல் விக்கிரமசிங்க மேற்கோள் காட்டி, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பெருமளவு நிதி பாதுகாப்புக்கு ஒதுக்கப்படுகிறதென தெரிவித்தார்.

இராணுவ ரீதியில் பிரச்சினை தீர்க்க எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் மேலும் கேட்டுக்கொண்டார். -ம-இ

## நிதி ஒதுக்கீடு

(உடுவில்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்துக்கு 1994ம் ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தித் திட்டத்துக்கென பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. -109

# மடு அகதி முகாமிலிருந்து யு. என். எச். சி. ஆர். வாபஸ்

(கொழும்பு)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் மடுவிலுள்ள அகதிமுகாமிலிருந்து வாபஸ் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது.

மடுவிலுள்ள அகதிமுகாமில் முப்பதாயிரம் தமிழ் அகதிகள் இருந்து வருகின்றனர். சமீபத்தில் ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் இந்த முகாமில் பணயம் வைக்கப்பட்டிருந்தனர்.

உணவுப்பங்கீட்டுப் பொருட்களை விநியோகிப்பதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இந்த சம்பவம் நிகழ்ந்தது. இம்முகாமிலிருந்து அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் வாபஸ் பெற்றதனையடுத்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை மடுவுக்கு கொண்டு செல்வதை நிறுத்தவேண்டிய நிலைக்கு மன்னார் அரசாங்க அதிபர் உள்ளாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. -இ

## கொடுப்பனவு

(திருநெல்வேலி)

1993-ஆண்டில் மாசி, பங்குனி, சித்திரை, ஆனி மாதங்களில் நடைபெற்ற முகாமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்றி இதுவரையும் அதற்கான கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளாத அதிபர்கள், பகுதித் தலைவர்கள் இன்று 22-ம் திகதி முதல் 30-ம் திகதி வரையுள்ள காலப் பகுதிக்குள் முகாமைத்துவ நிலையத்திற்கு வருகை தந்து தங்களது கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீட்பு நிதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உடுவில் - தெல்லிப்பளை 24ம் திகதி புதன்கிழமை பி. ப 2 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில். மானிப்பாய் - சங்கானை பி. ப 4-15 சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில்

கரவெட்டி. பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு 25ம்திகதி வியாழக்கிழமை பி. ப. 1-15 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் சாவகச்சேரி - பச்சிலைப்பள்ளி - பி. ப. 3-45 சாவகச்சேரி றிபேக் கல்லூரிலும் வழங்கப்படும். (இ)

## மாவீரர் நாள் ஏற்பாடுகள்

(கோண்டாவில்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் சிரமதானம் ஒன்றை மேற்கொண்டனர். பணியாளர்கள் அனைவரும் பங்குகொண்ட இச் சிரமதானம் மூலம் ராஜவீதியிலுள்ள பண்ணையும் அதற்கு முன்னாலுள்ள வீதியும் துப்புரவு செய்யப்பட்டது.

0 0

(கொழும்புத்துறை)

மாவீரர் நினைவாக யாழ். கலைகரத்தினம் மகாவித்தியாலயம் உள்ள பகுதிகள், இப்பகுதி வீதிகள் சிரமதானப் பணிமூலம் தொடர்ந்து செய்யப்பட்டுவருகிறது.

இவ்வீதியில் மாவீரர் படங்களை வைத்து நினைவு கூரும் பொருட்டு ஒரு பந்தலும் அமைக்கப்பட்டுள்ளது.

மாவீரர்கள் நினைவாக இப்பகுதியிலுள்ள ச. ச. நிலையங்கள், ஏனைய பொது அமைப்புகள் சிரமதானப் பணியில் ஈடுபட்டுவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. -154

0 0

(அரியாலை)

மாவீரர் நாளையொட்டி யாழ் புனித பற்றிக்ஸ் சந்தியிலும், யாழ் அச்சக வீதி சந்தியிலும் மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மலர் தீப அஞ்சலி செலுத்தப்பட்டுவருகின்றன. -56

## ச. ச. நிலையம் சேதம்

(கிளிநொச்சி)

கடும் காற்றும் பெருமழையும் காரணமாக கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் இயங்கிவந்த கிளிநொச்சி சனசமூக நிலையம் சேதமடைந்துள்ளது. -83

## நோயாளர்கள் அதிகரிப்பு

(தெல்லிப்பழை)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவோர் தொகை தற்பொழுது அதிகரித்துள்ளன.

வடமராட்சியில் தற்பொழுது பலவகையான தொற்றுநோய்கள் அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. - 160

## கொழும்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பில் பதட்டம் ஒன்றை ஏற்படுத்த புலிகள் திட்டமிட்டுள்ளதாகவும் அண்மையில் இடம்பெற்ற பூநகரி மோதல் தொடர்பாக தலைநகரில் வதந்திகள் பரவி வருவதால் அவற்றை நம்பவேண்டாம் எனவும் அவ்வட்டாரங்கள் கூறியுள்ளன.

தற்போது கொழும்பின் சகல பகுதியில் ஒருவித பதற்ற நிலை காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. (ம-இ)

## பூநகரி தோல்வி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு மிகப் பெரும் நெருக்கடியை கொடுத்து வந்துள்ளனர்.

இந்த யுத்தம் குறித்து 'கவுன்ர பொயின்ற்' சஞ்சிகை ஆசிரியரும் முக்கிய இராணுவ ஆய்வாளருமான திரு வர்ணகுணதிலக கூறுகையில்: 1983ம் ஆண்டிலிருந்து இதுவரை சுமார் 17,000 சிப்பாய்கள் இராணுவத்திலிருந்து தப்பி ஓடிவிட்டனர். தற்போதும் 700க்கும் மேற்பட்ட படையினர் இழக்கப்பட்டுள்ளனர். கடந்தமூன்று வருடத்தில் ராணுவம்பெரும் இழப்புகளை சந்தித்துள்ளது. இவையெல்லாம் இராணுவத்திற்கு பெரும் பின்னடைவாகும் என்றார்.

அண்மைக்காலமாக ராணுவ தலைமைப்பீடத்தில் பெரும் கருத்து மோதல்கள் எழுந்துள்ளன

எனினும் இது பற்றிய செய்திகள் ராணுவ பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன மறுத்துள்ளார் அவர் இதுபற்றி கூறுகையில்: வெளியாட்கள் இராணுவ தலைமை பற்றி கதைத்து பிரச்சினை ஒன்றை ஏற்படுத்தப்பார்க்கிறார்கள். இராணுவத்திடையே கருத்து வேறுபாடு எதுவும் இல்லை. இராணுவ தலைமை நாட்டின் நலனுக்காகவே செயல்படுகிறது என்றார்.

எனினும் இராணுவ தலைமையில் திறமையின்மை காணப்படுகிறது. 1990 க்கு பிந்தைய இராணுவ நடவடிக்கைகள் இதனை காட்டுகின்றன. தற்போது இராணுவமும் அரசியல் தலைமையும் ஓரளவு ஒருங்கிணைந்து செயல்பட முனைந்து வருகின்றன. இராணுவ, அரசியல் தரப்பினரிடையே அதிகார சமபலம் இராணுவ நடவடிக்கைகளை பொறுத்தே அமைந்து வருகிறது எனவும் தெரிவித்தார். (இ)

மணிவாக்கு

ஒழுக்கத்தை உருவாக்குவதே கல்வியின் குறிக்கோள்.

— ஹெர்பேங் ஸ்பென்ஸ்.

## நமது நோக்கு

### வீதிகளும் விதிகளும்

வீதிகளில் நடக்கும் விபத்துக்கள் பற்றிய செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. விபத்துக்களுக்கான காரணம் என்ன?

நெருக்கள் பல ஒழுங்காக இல்லை. அனுமதிக்கப்பட்ட தார்ப் பீப்பாக்களே இங்கு வர 'வெட்கப்பட்டுக்' கொழும்பிலேயே தங்கிவிடுகின்றன. அடுத்துப் பெய்யும் மழையினால், வீதிகளில் வருவோர் விதிகளைப் பின்பற்றுவிட்டால், விபத்துக்கள் அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகி விடும்.

வீதி விதிகளை அறிந்திருப்போருக்குத்தான் வாகனம் செலுத்தும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது.

நெருக்கடியான சூழ்நிலையிலும் மினிபஸ் சேவை நடப்பது நல்ல காரியம். உருட்டுவதும், முன்னே போவதைக் கண்டபின் முந்தி ஓடுவதும் பயணிகளைத் தொங்கிய வைப்பதும் ஓரளவிற்காயினும் தவிர்க்கப்படவேண்டாமோ?

ஆண்டு பத்து மாணவர்களுடைய ஆங்கில நூலிலே வீதி விதிகளைப் பற்றிய பாடமே உண்டு. மாணவர்கள் அந்த விதிகளைப் பூரணமாக வீதிகளிலே கடைப்பிடிக்கிறார்களா? வேற்று மொழியின் ஆற்றல் குறைவினால், தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்களோ என்று சந்தேகப்பட நியாயமில்லை!

கல்விப் பணிப்பாளரே தான் வீதியில் சைக்கிளில் செல்லும்போது மாணவர்கள் வீதி விதிகளைக் கடைப்பிடிக்கும் இலட்சணம் பற்றி விமர்சித்தது செய்தியாக வந்தது.

விதிகளைப் பொறுத்த மட்டிலாயினும், கற்பவை கற்றபின் அதற்குத் தக நிற்க வேண்டும். அல்லாவிடில் விபத்துகளில் சிக்கி அல்லற்பட வேண்டுமல்லவா?

காலை நெருக்கடியான பிரதான வீதிகளில், குறிப்பிட்ட நேரங்களில் காவல்துறையினர் செயற்படும் விதம் பலரது பாராட்டுதலையும் பெற்றுவருவதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

காவல்துறையினரால் பல தடவைகள் ஆலோசனைகள் வழங்கப்பட்டும், அறிக்கைகள் வெளியிடப்பட்டும், தெருவிலே சமாந்தரமாகப் போவோர் பழக்கம் பூரணமாக நீங்கியுள்ளதா?

வீடுகளிலே ஆற அமர இருந்து பேசித் தீர்க்க வேண்டியதை வீதிக்குள் கொண்டுவரலாமா? அதாவது, சைக்கிளில் சமாந்தரமாகச் சென்றுகொண்டா பேசவேண்டும்?

பலருடைய விதியை நிர்ணயிக்கும் இடங்களாக வீதிகள் விளங்குவதைத் தடுக்க மேலும் கண்டிப்பு தேவை!

இன்று நினைவுதினம்

அமரர் ந. சபாரத்தினம் அவர்கள்

# நினைக்கத்தக்க ஒருவர்



அந்தக் காலத்திலேயே பெருந்தொகையான வர்த்தகர்களை உற்பத்திசெய்தமன் காரைநகர் மண் என்று ஒரு பெருமையுண்டு.

வர்த்தகர்களை மட்டுமல்ல, சிறந்த கல்விமான்களையும் உற்பத்தி செய்த பெருமை காரைநகருக்குண்டு. தமிழிலும் ஆங்கிலத்திலும் பேரறிஞர்களான பலர் அந்த மண்ணில் தோன்றியிருக்கிறார்கள்.

இந்தக் காரைநகர் தந்தஒரு அருமந்த பேறிஞர், உயர்வான மனிதர்தான் அமரர் ந. சபாரத்தினம் அவர்கள்.

அவர் அமரராகி இன்று (22-11-92) ஓராண்டு கழிந்துவிட்டது.

1910 ஆம் ஆண்டளவிலேயே பிறந்துவிட்ட பழைய காலத்து மனிதர் அவர். நல்ல குடும்பத்தில் பிறந்து மண் வாசனையோடு வளர்ந்து, படித்து, "அந்தக் காலத்துப்" பட்டதாரியானவர் அவர். 'அந்தக் காலத்துப் பட்டதாரி' என்று நான் குறிப்பிடுவதன் கருத்தை அறிந்தவர்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

ஆயிரம்பிறை கண்டு நிறை வாழ்வு வாழ்ந்த மெய்யாளர் அவர்.

எண்பது வயது வந்துவிட்டாலே 'சதாபிஷேகம்' (சதம்+நாறு) என்ற நூற்றாண்டு விழாக் கொண்டாடுவார்களாம். அதற்குள் ஆயிரம் பிறைக்காலம் வந்து விடும் என்பது கருத்து. சபாரத்தினம் அவர்கள் அதற்கு மேலும் சுகதேகியாக, அறிவு ஜீவியாக வாழ்ந்த பெருமை கொண்டவர்.

பத்தொன்பது வயது இளைஞனாக இருந்தபோதே இவர் 'மாணவர் காங்கிரஸ்' என்ற அமைப்பை உருவாக்கி நடத்துவதில் முக்கிய பங்கு கொண்டவர். அந்த வயதிலேயே மக்கள் சேவை என்ற பரந்த நோக்கு அவருடைய உள்ளத்தில் வேரூன்றி விட்டது.

இந்த உலகிலே முக்கியமான இரண்டு செல்வங்கள் உண்டு. ஒன்று பொருட் செல்வம். மற்றது கல்விச் செல்வம்.

இப்போது எல்லோருமே ஒரு சிலரைத்தவிர, மற்றைய எல்லோரும் பொருட்செல்வத்தையே குறியாகக் கொண்டிருக்கிறார்கள். கல்விச் செல்வத்தை நாடுபவர்களும் முக்கியமாக அதைப் பொருட்செல்வம் தேடுவதற்கான ஒரு சாதனமாகவே கருதுகிறார்கள்.

ஆனால் முற்காலத்தில் கல்விச் செல்வத்தையே பெரிதாக நினைத்து அதைத் தேடுவதிலேயே வாழ்நாளைக் கழித்தவர் இருந்திருக்கிறார்கள். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று நினைத்தார்கள்.

சபாரத்தினம் அவர்கள் கல்விச் செல்வத்தையே முதற் கருத்தாகக் கொண்டு கற்றவர். கசடறக் கற்றுப் பெரிய கல்விமானாக விளங்கியவர்.

அவர் பெற்ற கல்விச் செல்வத்தின் பலனாக பதவிகள் பல அவரைத்தேடி வந்தன.

வரதர்

யாழ் பல்கலைக்கழக முதலவை உறுப்பினராகவும், யாழ். மாநகரசபை பொதுநூல் நிலையக் கல்விமான் குழுவின் உறுப்பினராகவும், காரைநகர் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி முதலியவற்றின் அதிபராகவும், ஆசிரிய சங்கங்கள், அதிபர் சங்கங்களின் முக்கிய உறுப்பினராகவும் வேறு பல கல்வித்துறைகளிலும் சபாரத்தினம் அவர்கள் சேவையாற்றியுள்ளார்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக 'ஈழநாடு' நாளேட்டின் பொறுப்பாசிரியராகச் சிறிது காலம் பணியாற்றியுள்ளார்.

ஈழநாட்டில் அவர் கடமையாற்றியபோது அவரது எழுத்தாற்றலை நாடு நன்கறிந்தது. மிகுந்த கருத்தாழமும், விளக்கமும் நகைச்சுவையும் கலந்த அவருடைய ஆசிரியத் தலையங்கங்கள் வாசகர்களிடையேமிகுந்த வரவேற்பைப் பெற்றன. பொதுவாக ஆசிரியத் தலையங்கங்களை வாசிக்காமல் ஒதுக்கிவிடுகிறவர்கள் சபாரத்தினம் அவர்களின் எழுத்தின் நயம் கண்டு அவற்றைத்தேடி வாசிக்கத் தொடங்கினார்கள்.

நாட்டின் நெருக்கடியான நேரத்தில் அவர் எழுதிய தலையங்கங்கள் அழியா இலக்கியங்களாக அமைந்தன. அந்தத் தலையங்களுட் பல 'ஊரடங்கு வாழ்வு' என்ற பெயரில் ஒரு நூலாக இந்தியாவில் அச்சிடப்பெற்று வெளியானது குறிப்பிட்டுச் சொல்லத் தக்கது.

அமரர் சபாரத்தினம் அவர்கள் சிறந்த எழுத்தாளராக விளங்கியதோடு ஆற்றல்மிக்க பேச்சாளராகவும் விளங்கினார்.

சிலர் பக்கங்களை நிரப்புவதற்காக எழுதுவார்கள். பேசுவதற்கு மேடை கிடைத்துவிட்டால் இவர் 'வளவள' என்று பேசிக் கொண்டேயிருப்பார்கள்.

ஆனால் சபாரத்தினம் அவர்கள் எடுத்துக்கொண்ட கருத்தை விளக்குவதற்காகவே பேசுவார், எழுதுவார். ரசிகர்களை ஒருபோதும் அலுக்கச் செய்யமாட்டார். அவருடைய உள்ளத்திலே உண்மை ஒளி இருந்தது. அது அவர் வாக்கிலே வந்தது,

ஒருநாள் அத்தியடியில் ஒரு நண்பரைப் பார்ப்பதற்காகப் போயிருந்தேன். நண்பரின் வீடு எனக்குச் சரியாகத் தெரியாது. கோயிலுக்குப் பக்கத்தில் என்றுமட்டும் அடையாளம் சொல்லியிருந்தார்கள். நான் கோயிலுக்கு முன்னால் மோட்டாரை நிறுத்தி விட்டு இறங்கினேன். கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய கடை. அந்தக் கடையில் விசாரிக்கலாமென்று கருதி அந்தப் பக்கம் போனேன்.

கடையின் முன்னாலிருந்த வாங்கில் ஒருவர் இருந்து கடைக்காரருடன் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார். வேட்டி உடுத்து மேலே ஒரு துண்டு மட்டும் போர்த்திய மெல்லிய ஆள்.

கிட்டப் போனதும்—

'அட, சபாரத்தினம் மாஸ்டரா!' என்று திகைத்துப் போனேன். 'அந்தப் பெரிய மனிதரா, இப்படிச் சாதாரண கிராமத்து வயோதிபரைப் போல...'

என்னைக் கண்டதும் மாஸ்டரும் எழும்பிவந்து, 'என்ன, வரதராசா!' என்றார். (நண்பர் கனக செந்திநாதனும், சபாரத்தின மாஸ்டரும் ஏனோ என்னுடைய இயற்பெயரான 'வரதராசா' என்றுதான் அழைப்பார்கள்.

அவருடைய எளிமையான தோற்றமும் குணநலனும் என்னுடைய நெஞ்சைத் தொட்டன.

"அது தான் சபாரத்தின மாஸ்டர்! அந்த "எளிமை" தான் அவர் கற்ற கல்வியின் பயன்.!

அவருடைய உள்ளத்தில் 'ஆசை' இல்லை. அதனால் எத்தனையோ துன்பங்களும் அவருக்கு இல்லை.

கல்வியின் பயன் என்ன? எல்லோரும் ஆளுக்கு ஒவ்வொரு விதமாகச் சொல்வார்கள்.

வள்ளுவர் கூட "கற்றதனாலாய பயன் என்ன, வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்'' என்று தான் சொன்னார்.

கல்வியின் பயன் "உலக வாழ்வின் உண்மையை உணர்ந்து பாசங்களை ஒழித்து வாழ்வாங்கு வாழ்வதுதான்" என்றால் அப்படி வாழ்ந்தவர் அமரர் சபாரத்தினம் அவர்கள்.

இந்த உலகத்தில் பிறந்தவர்கள் எல்லோரும் மறைவது உறுதி.

மறைந்தவர்கள் எல்லோரும் விரைவில் மறக்கப்பட்டும் விடுகிறார்கள்;

ஆனால் அவர்களில் சிலர் தக்கவர்கள் மறவாமல் நினைத்துப் பார்க்கத்தக்கவர்களாக விளங்குகிறார்கள்

அப்படி நினைத்துப் பார்க்கத்தக்க ஒருவர் அமரர் சபாரத்தினம் அவர்கள்!

## மாவீரர் வார வேலைத் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தை ஒட்டி இன்று 22-ம் திகதி திங்கட்கிழமை யாழ். மாவட்டத்தில் நடைபெறும் சிரமதான வேலைத்திட்டங்களின் விபரம் வருமாறு;

நல்லூர் வட்டம்: திருநெல்வேலி மத்தி-வடக்கு. திருநெல்வேலி பாற்பண்ணை வீதி, ஆணித்தொழிற்சாலை முதல் மயானம் வரையிலான பற்றைகள் வெட்டுதல். திருநெல்வேலி மேற்கு பிற்பகல் 2 மணி முதல் திருநல்வேலி பரலைக் குளத்தினைச் சுற்றியுள்ள அணைக்கட்டுகளில் பனம் விதைகள் நடுதல், டைஸ் வீதி துப்பரவு செய்தல்.

யாழ். மாவட்டம்: மானிப்பாய் மேற்கு, காலை 9 மணிக்கு வெள்ள வாய்க்கால் துப்பரவு செய்தல்.

உடுவில் வட்டம்: உடுவில் வடக்கு காலை 9 மணிக்கு நாச்சிமார் கோயிலடி குள சுற்றுடல் துப்பரவு செய்தல்.

சங்கானை வட்டம்; சங்கானை மேற்கு காலை 9மணிக்கு கொவ்வாலை வாய்க்கால் துப்பரவு செய்தல். தொல் மேற்கு காலை 9 மணிக்கு மரம் நடுகை செய்தல். (வி)

## கோட்ட ரீதியில் நடைபெறும் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் கூட்டங்கள் தொடர்ந்து இன்று 22ம் திகதி திங்கட்கிழமை இரவு 7-30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும், உடுவில் தெல்லிப்பளை கோட்டத்தில் இரவு 7-30 மணிக்கு மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் முன்றலிலும்.

தென்மராட்சி பளை வட்டத்தில்: இரவு 8மணிக்கு புலோப்பளை அ. த. க. பாடசாலையிலும், தீவகக் கோட்டத்தில் இரவு 7-30 மணிக்கு நாவற்குழி லவனிதா குடியிருப்பிலும். யாழ். மாவட்ட கடற்புலிகளினால் இரவு 7மணிக்கு மூளாய்ப் பிள்ளையார் கோவிலடி பிரசாத் கலையரங்கிலும் கூட்டங்கள் நடைபெறவுள்ளன; -ஞ

### இன்று

(நெல்லியடி)

தமிழீழத்திலிருந்து வெளியாகும் சஞ்சிகைகள், பத்திரிகை ஆசிரியர்கள் கலந்துரையாடல் இன்று 22ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை, மந்திகை பளை- தென்னிலை அபிருத்தி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. -160

0 0

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் நீர்வேலிக் கொத்தணியினரால் வெளியிடப்படவிருக்கும் "புதிய பூமி" என்னும் கையெழுத்துச் சஞ்சிகை இன்று காலை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

### நுளம்பு அதிகரிப்பு

(அரியாலை)

யாழ் மாவட்டத்தில் மழை பெய்துள்ளபடியால் வாய்க்கால்களில் நுளம்புகள் பெருகியுள்ளன. இதனால் மலேரியா நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. (59)

இகமீதில் உன் நாமம்

என்றும் வாழும்

செந்தமிழில் சிவநெறியில் ஆங்கிலத்தில்

தேர்ந்துபணி செய்துவந்த செம்மை யாளர்

இந்துவில்நல் லாசானாய் அதிப னுமாய்

ஏற்றமிகு மேடைப்பே ச்சாள ருமாய்

பத்தமொடு ஈழநாட் டாசிரிய ராகி

பாரிக்கும் குரலோங்கிப் பரவச் செய்த

இந்தமண் பேற்றுசபா ரத்தி னமே

இகமீதில் உன்நாமம் என்றும் வாழும்

— நாயன்மார்கட்டு இ. குகதாசன்:

மாவீரர் வார நாளாம் இன்று -

அவர் நினைவாய்

மரம் ஒன்று நடுவோம் வாரீர்

# தப்பி ஓடும் படையினரை தடுப்பது கடினமாயிருக்கும்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பி ஓடுவோர் தொகை அடுத்த சில மாதங்களில் பெருமளவில் அதிகரிக்கலாமென இராணுவ ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த மூன்று வருடங்களில் 8,000 க்கும் மேற்பட்ட படையினர் தப்பி ஓடியுள்ளனர். இவர்களைத் தேடிப் பிடிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எதிர்பார்த்ததுபோல நடைபெறவில்லை. பிடிபட்டவர்கள் கூட இராணுவசேவையில் தொடரமறுத்துவிட்டார்கள்.

இந்நிலையில் கிளாலி, பூநகரி, மோதல் இராணுவத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரும் தோல்வியாகும். இதில் ஏற்பட்ட இழப்புகளும் மிகமிக அதிகம். இந்நிலையில் அச்சமடைந்து காணப்படும் படையினர் இனிமேல் தப்பி ஓடும்போது அவர்களைத் தடுப்பதோ அல்லது மீண்டும் சேவைக்கு பிடிப்பதோ மிகக்கடினமாகஇருக்குமெனவும் அந்தஆய்வாளர்கள் கூறியுள்ளனர். (ஸி)

## மதுரை பொலிஸ் நிலையம் இளைஞர்களால் முற்றுகை

(சென்னை)

மதுரை பொலிஸ் நிலையம் நேற்று இளைஞர் குழு ஒன்றினால் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டது. இக் கூட்டத்தை கலைப்பதற்கு பொலிசார் பலத்த தடியடிப் பிரயோகத்தையும் மேற் கொண்டனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கக் கோரியே பொலிஸ் நிலையம் மீதான முற்றுகை இடம் பெற்றதாம்.

கூட்டத்தினர் கலைந்து ஓடிய போது பஸ்களுக்கு கல் எறிந்தனராம். இதனால் பஸ் சாரதி உட்பட நால்வர் காயமடைந்தனர். இச் சம்பவம் குறித்து 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (க-சி)

## மீட்பு நிதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

21 - 11 - 93 அன்று பிரசுரிக்கப்பட்ட தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு தொடர்பான தொடர்பு இலக்கங்களில் சித்திரை மாதத்திற்குரிய தொடர்பு இலக்கம் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் யா/உ/295 க்குப் பதிலாக யா/உ/205 என பிரசுரிக்கப்பட்டுள்ளது யா/உ/295 என்பதே சரியாகும்.

## இராணுவ உயர் தளபதி ஹெரி டி சில்வாவின் பதவிக் காலம் நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் பிரதம படைத்துறை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவின் பதவிக்காலம் அடுத்தவருடம் ஜனவரி மாதத்திலிருந்து மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா 1960ம் ஆண்டு கடேற் அதிகாரியாக இராணுவத்தில் சேர்ந்து பின்னர் படிப்படியாக பதவிஉயர்வு பெற்றவர்.

இங்கிலாந்தில் இராணுவ பயிற்சிகழகத்தில் விசேட பயிற்சி பெற்றஇவர் வடக்கில் உள்ள இராணுவ முகாம்களில் ராணுவ உயர் தளபதியாக சேவையாற்றியுமுள்ளார். (க-ஸி)

## ஷெல் வீச்சினால் ஆலயம் சேதம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு ராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை, மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சு யாழ். பாஷையூர் வீதியில் மவுண்ட் கார்மல் வீதிச்சந்தியில் உள்ள புனிதகார்மல் ஆலயத்திற்கு அருகில் வீழ்ந்து வெடித்தது.

இச்ஷெல்லினால் தேவாலயமும் ஆலய சுற்றுடல் பகுதி பலத்த சேதமடைந்தன. (59-ஸி)

## சுப்பசொனிக் தாக்குதலில் காயமடைந்த இருவர் நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் கடந்த 12ம் திகதி இடம்பெற்ற சுப்பசொனிக் குண்டுவீச்சின்போது படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

கச்சேரியடியைச் சேர்ந்த சூசை வின்சன்ற் (வயது 55) என்பவரே மரணமானவராவார்.

இதேவேளை கொக்குவில் நந்தாவில் பகுதியில் கடந்த 13ம் திகதி இடம்பெற்ற சுப்பசொனிக் குண்டுவீச்சின்போது காயமடைந்தவர்களில் ஒருவரான நந்தாவிலைச் சேர்ந்த செல்லையா சேனாதிராசா (வயது 69) என்பவரும் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார். (ஸி)

## எழுதுவினைஞர் தெரிவு: தமிழர் எவருமில்லை 41 சிங்களவர் தெரிவு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவை தரம் II இற்கு நடைபெற்ற பரீட்சையில் தமிழர் எவருமே தெரிவு செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 42 பேரில் முஸ்லிம் ஒருவரும் மிகுதி 41 பேரும் சிங்கள இனத்தவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1989-ம் ஆண்டு நடாத்தப்பட்ட இப்பதவிக்கான பரீட்சையின் விபரங்கள் 1993-ம் ஆண்டு அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. (க-ஸி)

## உணவுப் பொருட்கள் விலை குறைப்பு

(கொழும்பு)

தரத்தில் அடைக்கப்பட்ட மீன், வெள்ளைப் பூடு, சிவப்பு பருப்பு உட்பட பலதரப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையை கூட்டுறவு மொத்த ஸ்தாபனம் குறைத்துள்ளது.

அண்மையில் அறிவிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரமே இந்தப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதாம். ஒரு கிலோ சிவப்பு பருப்பின் விலை 2 ரூபாவினாலும் வெள்ளைப் பூடின் விலை 10 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளன. பெரிய தரத்தில் அடைக்கப்பட்ட மீனின் விலை 1 ரூபா 10 சதத்தாலும் குறைக்கப்பட்டுள்ளது. உருளைக் கிழங்கின் விலையை குறைப்பதற்காக அதனை இறக்குமதி செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-ஸி)

## பயங்கரவாதப் பிரச்னையை ஓரிரவில் தீர்க்கமுடியாது ஜனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

பயங்கரவாதம் பாரிய பிரச்னையாகும். திடீரென ஓரிரவில் இப்பிரச்னையை தீர்த்து விட முடியாது இதனை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை சிந்தித்தே எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி விஜயதுங்க நுவரெலியாவில் நடைபெற்ற ஐ. தே. க. வருடாந்த மாநாட்டில் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில்;

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு விரைவில் நிரந்தரமான தீர்வு காணப்படும் கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தேர்தல் ஒழுங்காக நடைபெறுமென தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார். (ஸி)

## இலங்கைக்கு உதவுக ஐ. நா. பிரதிநிதி கோருகிறார்

(கொழும்பு)

இலங்கையில் வன்செயலினால் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் இலங்கை அரசின் முயற்சிக்கு உலக நாடுகளும் பொது ஸ்தாபனங்களும் உதவ வேண்டும் என ஐ. நா. செயலரின் விசேட பிரதிநிதியான கலாநிதி பிரான்சிஸ் டெங் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் விசேட அழைப்பின் பேரில் இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட இவர் வடக்கு கிழக்கு மற்றும் கொழும்பு போன்ற இடங்களில் அகதிகள் முகாம்களுக்கு விஜயம் செய்து நிலைமையை நேரடியாக அவதானித்த பின் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விஜயத்தின்போது திரு. டெங் ஜனாதிபதி பிரதமர் உட்பட பல அமைச்சர்களையும் சந்தித்து அகதிகளின் பிரச்னைகள் குறித்து ஆராய்ந்துள்ளார். (க-ஸி)

## புக்காரா - ஹெலி நோட்டம்

(அரியாலை)

நேற்று காலையும் நண்பகலும் யாழ். குடா வான்பரப்பில் புக்காரா விமானமும் ஹெலியும் நோட்டம் இட்டுச் சென்றன. கடந்த இரு தினங்களாக விமான ஓட்டங்கள் அதிகரித்தும் காணப்படுகிறது. (59-ஸி)

## இந்தியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

அண்மையில் கச்சதீவு தொடர்பாக இலங்கை - இந்திய அரசுகள் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடாத்திய பின்பும் இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூட்டை நடாத்தியுள்ளார்கள் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (சி)

## அரசுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யானைச் சின்னத்திற்கே வாக்களிக்க வேண்டுமெனவும் வற்புறுத்தி வருகிறார்களாம்.

கிராமங்களை சுற்றிவளைத்து பொது மக்களை கைது செய்து ஓரிடத்தில் நிறுத்தி அங்கு வரும் இராணுவ அதிகாரிகளால் மேற்படி அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரமாக படையினர் இவ்வாறான நடவடிக்கையில் தொடர்ந்தும்ஈடுபட்டு வருகிறார்களாம் -ஸி

## மாவீரர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொடியேற்றப்பட்ட சகல இடங்களிலும்தேசியக்கொடிக்கான வணக்கமும் மாவீரர்களுக்கான அஞ்சலியும் மற்றும் மாவீரர் நினைவு நிகழ்ச்சிகளும் நடைபெறும் நேற்று மாவீரர் வார ஆரம்பநாள் நிகழ்வுகளில் பல இடங்களிலும் பெருந்திரளான மக்கள் நேற்று உணர்வுடன் ஈடுபட்டனர்.

வீதிகள் தோறும் மாவீரர் நினைவு வளைவுகள் கட்டப்பட்டுள்ளன மஞ்சள் சிவப்பு வர்ணக் கொடிகளால் எங்கும் அலங்கரிக்கப்பட்டு தமிழீழம் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது. முக்கிய இடங்களில் எழுச்சிப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டும் வருகிறது.

வீதிகள், பொது இடங்கள், ஆலயச் சுற்றுடல், பாடசாலைகள் போன்றவை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு சுத்தமாக காட்சியளித்தன.

நேற்றுக்காலை தமிழீழதேசியக் கொடியேற்றும் வைபவத்தையொட்டி புலிகளின் குரல் வானொலியின் காலைச் சேவை 9-30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. 9 மணிக்கு கொடியேற்றப்பாடல் ஒலிபரப்பப்பட்டது. (ம-ஸி)

## பல மாதங்களின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் வெருகல். ஈச்சிலம்பத்தை 49-ம் கட்டை இராணுவமுகாம்களிலிருந்து முட்டிச்சேனை, மற்றும் வாலித் தோட்டம் பகுதிகளை நோக்கி பெரும் எடுப்பில் நேற்றுக் காலை முன்னேறிய இராணுவத்தினர் மீது புலிகள் தொடுத்த அதிரடித்தாக்குதலில் இராணுவசிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் 5 இராணுவத்தினர் பலத்த காயமடைந்தனர்.

முட்டிச்சேனை என்ற இடத்தில் சுமார் 45 நிமிடம் இத்தாக்குதல் நீடித்தது.

இத்தாக்குதலையடுத்து இழப்புக்களுடன் முகாம் திரும்பிய இராணுவத்தினர் மீண்டும் காலை 10-30 மணியளவில் வெருகல் இராணுவமுகாமிலிருந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டவாறு முன்னேற முயன்றனர்.

படையினரின் முன்னேற்ற முயற்சியை முறியடித்த விடுதலைப் புலிகள் படையினருக்கு பலத்த சேதத்தையும் ஏற்படுத்தினர்.

இதேநேரம் மட்டக்களப்பில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட ராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்றுமேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் 2 சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ஸி)

## உண்மைச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அரசாங்கம் வடக்கு-கிழக்கு யுத்தம் பற்றி தென்பகுதியில் தெரிவிக்கும் செய்திகளாவும் உண்மைக்கு புறம்பானவை என்றும் மேலும் அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-ஸி)

## மன்னார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியிலும் நேற்று விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளது.

அதிஷ்டவசமாக இத்தாக்குதல்களில் உயிர் உடமைச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. ஆயினும் பயன்தரு மரங்கள் பல இத்தாக்குதலினால் சேதமடைந்துள்ளன. (க-சி)

## இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர் வாரத்தையும், புலிகளின் தலைவரின் பிறந்த தினத்தையும் ஒட்டி புலிகள் இத்தாக்குதலை தொடுக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து சகல படை முகாம்களும் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் கூறியுள்ளன. (ஸி)

# கண்ணீர் அஞ்சலி

## எம். எஸ். வின்சன்ற்

இராசேந்திரா வீதி இல. 10ஐச் சேர்ந்தவரும், குருநகர் சந்தை முதலாம் இலக்க மாட்டிறைச்சிக் கடை உரிமையாளருமான எம். எஸ். வின்சன்ற் அவர்கள் மரணமானார். அவரின் மறைவையொட்டி யாழ். மாவட்ட ஆட்டிறைச்சிக்கடை, மாட்டிறைச்சிக்கடை உரிமையாளர்கள் தங்கள் கடைகளை இன்று கதவடைப்புச் செய்வதோடு, கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றார்கள்.

ஜே. சூரியதாஸ் (சூரி)

(ஸி-615)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10, 336/B: